

ஸ்ரீ குமுதவல்லி நாச்சியாருடன் திருமங்கையாழ்வார்

# திருமங்கையாழ்வார் வைபவ சிறப்பு

## திருநாங்கூர் 11 கருடஸேவை உத்ஸவ விசேஷம்

எழுதியவர்: திருநாங்கூர் வித்வான்
ஸ்ரீ. உ.வே. PBK ஸ்ரீனிவாஸாசாரியர் ஸ்வாமி

திருமங்கையாழ்வார் ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாதன் திருக்கோவில் மண்டபம், மதிள், கோபுரம் முதலான திருப்பணிகள் செய்தார். ஒரு கார்த்திகையில் கார்த்திகை அன்று ரங்கநாதன் திருமுன்பே திருநெடுந்தாண்டகத்தை உள்ளங்கரைந்து இனிமை ததும்பப் பாடினார். ஸ்ரீரங்கநாதன் மிக விரும்பிக்கேட்டு இன்ப முற்று உமது விருப்பத்தைச் சொல்லும் அதை நிறைவேற்றித் தருகிறேன் என்று சொன்னான் ஆழ்வார் நீர் மார்கசீர்ஷ (மார்கழி) சுக்ல ஏகாதசி முதல் 10 தினங்கள் வேதகோஷத்தைக் கேட்பதுபோல் நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழியையும் தமிழ்வேதமென வேதஸாம்யம் கொடுத்துத் திருச்செவிசாற்றியருள வேண்டும் என்று வேண்டினார். ஸ்ரீரங்கநாதனும் அப்படியே ஆகுக என்றார். திருமங்கையாழ்வாரும் நம்மாழ்வாரை ஆழ்வார்திருநகரியிலிருந்து ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வந்து 10 தினங்கள் திருவாய்மொழியைக் கேட்கச்செய்து முடிவில் நம்மாழ்வாரை நம்பெருமாள் திருவடித்தொழச்செய்து மீண்டும் நம்மாழ்வாரை ஆழ்வார்திருநகரியில் எழுந்தருளப்பண்ணிவிட்டுத் திரும்பி ஸ்ரீரங்கம் வந்தார். வந்தநாள் தை அமாவாசை. ஸ்ரீரங்கநாதன் திருமஞ்சனக்காவேரியில் மஞ்சள்குளி உத்ஸவம் கண்டருளினார். மார்கழி சுக்ல ஏகாதசி முதல் 10 தினங்கள் நடைபெற்ற அத்யயன உத்ஸவ பூர்த்தியின் ஸந்தோஷ நினைவாக இந்த மஞ்சள்நீராட்டு என்னும் மஞ்சள் குளி உத்ஸவம் நடைபெற்றது. ஸ்ரீரங்கநாதன் திருமங்கையாழ்வாருக்கு அத்யயன உத்ஸவத்தை சிறப்பாக நடத்தி வைத்ததற்கு பகுமானமாக "இந்த உத்ஸவத்தை நீர் உமது ஊரில் உற்றார், உறவினருடன் ஸந்தோஷமாகக் கொண்டாடிக்கொள்ளும்" என்று அனுக்ரஹித்து

அருளினார். மன்னனும் இந்நிலவுலகில் வாழ்ந்தகாலம் வரை இந்தவிழா திருவரங்கத்தில் காவிரிக்கரையில் நடைபெற்று வந்தது. அவர் அர்ச்சையில் கோயில்கொண்டு எழுந்தருளிய பிறகு திருவாலி திருநகரி திவ்யதேசத்திற்கு சமீபம் நாங்கூர் தெற்கு எல்லையில் பெருகும் காவேரியின் பிரிவான மணிகர் ணிகையில் இவ்வுத்ஸவம் நடைபெற ஏற்பாடாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. திருமங்கையாழ்வார் அர்ச்சாத்திருமே னியுடன் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் திருநகரியிலி ருந்து தை அமாவாசை விடியற்காலை தமது தர்மபத்னியான குமுதவல்லித் தாயாருடனும், திருவாராதன எம்பெருமானான சிந்தனைக்கினியானுடனும் திருப்பல்லக்கில் திருநாங்கூரில் பெருகும் மணிகர்ணிகைக்கு எழுந்தருளி, மஞ்சள்குளி உத்ஸ வம், திருமஞ்சனம் தீர்த்தவாரி கண்டருளுகிறார். சுமார் 100 வருடங்களுக்குமுன் சித்திரகூடம் (சிதம்பரம்) விஞ்சமூர் ஸ்ரீ.உ.வே. ஸ்ரீநிவாஸாசாரியர் (இன்ஸ்பெக்டர் சாமி அய்யங் கார்) ஸ்வாமி ஸ்கூல் இன்ஸ்பெக்டராக திருநெல்வேலி ஜில்லா ஆழ்வார்திருநகரிக்குச் சென்றிருந்தபோது நம்மாழ்வார் கண்ட ருளும் நவதிருப்பதி கருடஸேவை உத்ஸவத்தை ஸேவித்து இதேபோல் திருமங்கையாழ்வாருக்கும் திருநாங்கூர் 11 திருப் பதி கருடஸேவை உத்ஸவம் கண்டருளப்பண்ண வேண்டும் என்று திருவுள்ளம் கொண்டார். அந்த நல்ல திருவுள்ளம் நல்ல முகூர்த்தத்தில் தோன்றி தொடர்ந்து இன்றளவும் மேல்நாளும் மேன்மேலான சிறப்பாக இவ்வுத்ஸவம் நடைபெற செய்துவரு கிறது. தை அமாவாசை அதற்கு மறுநாள், அதற்கு மறுநாள் என 3 நாள் உத்ஸவம் இராப்பகல் முழுவதும் நடைபெறும்.

*உத்ஸவவிவரம்*: தை அமாவாசை விடியற்காலை ஸ்ரீதிருமங் கையாழ்வார் திருநகரியிலிருந்து பல்லக்கில் புறப்பட்டு திருக் குறையலூர், திருமங்கைமடம், திருக்காவளம்பாடி, திருமணிக் கூடம், திருப்பார்த்தன்பள்ளி ஆகிய திவ்யதேச எம்பெருமான் களை மங்களாஸாசனம் செய்தருளி பகல் 12 மணி சுமாருக்கு மஞ்சள்குளி மண்டபம் எழுந்தருளுகிறார். அங்கு திருவரங்கம் ஸ்ரீஅழகியமணவாளனையும், திருநறையூர் (நாச்சியார்கோவில்) எம்பெருமானையும் மங்களாஸாசனம் செய்து அருளுகிறார்.

பிறகு திருமஞ்ஜனம், திருப்பாவை சாற்றுமறை, ததீயாராதனம் நடைபெறுகிறது. மாலையில் திருமங்கையாழ்வார் திருநாங்கூருக்கு எழுந்தருளி ஸ்ரீமணிமாடக்கோவில், ஸ்ரீவண்புருடோத்தமன், ஸ்ரீவைகுந்தவிண்ணகரம், ஸ்ரீசெம்பொன்செய்கோயில், திருத்தெற்றியம்பலம், ஸ்ரீஅரியமேயவிண்ணகரம் ஆகிய திவ்யதேச எம்பெருமான்களை மங்களாஸாசனம் செய்தருளி இரவு மணிமாடக்கோவில் எழுந்தருளுகிறார்.

தை அமாவாசைக்கு மறுநாள் பகலில் 11 எம்பெருமான்களும் ஒரே சமயத்தில் மணிமாடக்கோவில் வாசலில் அமைந்த பந்தலில் எழுந்தருளியிருக்க அவர்களை திருமங்கையாழ்வார்

நந்தாதீப,கடப்ரணர்த்தக, மஹாகாருண்ய ரக்தாம்பக,
ஸ்ரீநாராயண, புருஷோத்தமபதி, ஸ்ரீரத்னகூடாதிபாந் ।
வைகுண்டேஸ்வர மாதவௌச, கமலாநாதம்ச, கோபீபதிம்
நௌம் யேகாதச நாகபுர்யதிபதீந் ஸார்த்தம் கலித்வம் ஸிநா ॥

என்ற கிரமத்தில் மங்களாஸாசனம் செய்து அருளுகிறார். அப்போது அந்தந்த திவ்யதேச எம்பெருமான்களின் முதல் பாசுரம் ஸேவிக்கப்படுகிறது. பிறகு ஸ்ரீவண்புருடோத்தமன் ஸந்நிதி ஸ்ரீமணவாளமாமுனிகள் திருமங்கையாழ்வாரை நாள்பாட்டு வடிவழகு சூர்ணிகை முதலிய பாசுரங்களால் மங்களாஸாசனம் செய்தருளுகிறார். பிறகு மண்டபம் சேர்ந்து மாலையில் எல்லோருக்கும் திருமஞ்ஜனம் நடைபெறுகிறது. இரவில் 11 எம்பெருமான்களுக்கும் கருடஸேவையும், ஸ்ரீதிருமங்கையாழ்வாருக்கு ஹம்ஸவாஹனமும், ஸ்ரீமணவாளமாமுனிகள் புறப்பாடும் நடைபெறுகிறது. அதற்கு மறுநாள் திரும்புகாலில் திருமங்கையாழ்வார் திருவெள்ளக்குளம், திருத்தேவனார்தொகை, திருவாலி ஆகிய திவ்யதேசங்களை மங்களாஸாசனம் செய்தருளி திருநகரி எழுந்தருளுகிறார். திருவாலி மற்றும் திருநகரி எழுந்தருளும்போதுஅங்கு கருடஸேவை நடைபெறுகிறது. இவ்வாறு கருடஸேவை உத்ஸவம் ஏற்பட்டு 100 வது ஆண்டு விழா 1994 ஆம் ஆண்டு வெகுவிமர்சையாக நடைபெற்றது. அமாவாசை முதல்நாள் வந்து மறுநாள் பிச்சம் இருந்தால்

அமாவாசையில் ஆழ்வார் புறப்படாமல் மறுநாள் பிச்ச அமா வாசை நாளில் புறப்படுவார். கனுபாரிவேட்டை சமயம் தை அமாவாசை வந்தால் உத்ஸவதினம் வேறுபாடு ஆகும். உத்ஸ வத்திற்கு வருபவர்கள் இதை நினைவில் கொள்ளவேண்டும்.

ஸ்ரீமதாலி ஸ்ரீநகரீநாதாய கலிவைரிணே ।
சதுஷ்கவி ப்ரதானாய பரகாலாய மங்களம் ॥

சுபம்



ஸ்ரீ. உ. வே. சித்ரகூடம் விஞ்சிமூர்
ஸ்ரீநிவாஸாசாரியார் ஸ்வாமி
(திருநாங்கூர் 11 கருடசேவை உத்ஸவத்தை
தோற்றுவித்தவர்)